# அக இலக்கியங்களில் கற்பு நெறி

**முனைவர் து. வெள்ளைச்சாமி & மேனாள்**

**முதுகலைத் தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வுமையம்,**

**அய்ய நாடார்ஜானகி அம்மாள் கல்லூரி, (தன்னாட்சி),**

**சிவகாசி.**

**ஆய்வுச்சுருக்கம்:**

'சங்க இலக்கியம் 'என்பது தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்க காலப் படைப்பாக நமக்குக் கிடைத்த பாடல்களின் தொகுப்பு. இப்பாடல்கள் கி.மு, கி.பி வரையிலான ஐந்நூற்றாண்டுக் கால இடைவெளியில் இயற்றப்பட்டது. தொல்காப்பியத்திற்கு முன்னரும் தொல்காப்பியர் காலத்தும் நிலவிய தமிழர் தம் இலக்கிய மரபினையொட்டி இயற்றப்பட்ட நூலாகும். தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் என்னும் பாகுபாடு கொண்டவை. ஒருவன் ஒருத்தி கூடி வாழும் வாழ்க்கை அகம் என்றும், ஏனைய வாழ்க்கைக் கூறுகள் புறம் என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது. அதன் அடிப்படையில் சங்க நூல்கள் அகப் பொருள் நூல்கள் என்றும் புறப்பொருள் நூல்கள் என்றும் பகுக்கப்பட்டன. அக இலக்கியம் தலைவன் தலைவியின் இன்பத்தைப் பற்றிப் பேசுவதாகும். அகத்திணை ஒரு பெண்ணிலக்கியம், அகத்திணை ஒரு கற்பிலக்கியம் என்று கூறப்பட்டன. பத்துப்பாட்டினுள் ' முல்லைப் பாட்டு ' ' குறிஞ்சிப்பாட்டு ' ஆகியபாட்டுகள் இரண்டும்

அகப்பொருளைக் கூறுவன, இருப்பினும் முல்லைப்பாட்டில் கற்பு நெறி மற்றும் குறிஞ்சிப் பாட்டில் கற்பு நெறி குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**முன்னுரை:**

'சங்கஇலக்கியம்' என்பது தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்க காலப்படைப்பாக நமக்குக் கிடைத்த பாடல்களின் தொகுப்பாகும். இப்பாடல்கள் கி.மு 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2 ஆம் நூற்றாண்டு வரையிலான ஐந்நூற்றாண்டுக் கால இடைவெளியில் இயற்றப் பெற்றவையாகக் கருதப்படுகின்றன. தனிப்பாடல்களாக இருந்த இவற்றைத் தொகுக்கும் பணி கி.பி 5 ஆம் நூற்றாண்டில் செய்யப் பெற்றதாக வரலாறு கூறுகிறது. ஆக, மிகப் பழைய சங்கப் பாடலுக்கும், அதாவது தொடக்க காலத்தே இயற்றப் பெற்ற சங்கப் பாடலுக்கும், அதைத் தொகுத்த காலத்திற்கும் இடையே ஏறக் குறைய 800 ஆண்டு இடைவெளி இருந்தது என்பது தெளிவாகிறது.

தொல்காப்பியத்திற்கு முன்னரும் தொல்காப்பியர் காலத்தும் நிலவிய தமிழர் தம் இலக்கிய மரபினையொட்டிச் சங்கப் பாடல்கள் இயற்றப் பெற்றன. அன்றைய மரபின்படி, தமிழ் இலக்கியப் படைப்புகள் அகம், புறம் என்னும் இரு பெரும்பாடு பொருளைக் கொண்டவையாக அமைந்துள்ளன. மானுட வாழ்க்கையில் ஒருவனும் ஒருத்தியுமாகக் கூடி வாழும் காதல் வாழ்க்கையை அகம் என்றும், மானுட

வாழ்க்கையின் ஏனைய கூறுகளைப் புறம் என்றும் தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் இலக்கண நூல்கள் பாகுபாடு செய்து விளக்குகின்றன. இத்தகைய பாகுபாட்டின் அடிப்படையில் சங்கப்பாடல்கள் அகப்பொருள் நூல்கள் என்றும் புறப் பொருள் நூல்கள் என்றும் இரு வகையாகத் தொகுக்கப் பெற்றன.

மனித வாழ்வின் மேன்மைக்கு உதவுவனாகத் தமிழர் அமைத்துக் கொண்டவை உறுதிப்பொருள்கள் ஆகும். அறம், பொருள், இன்பம், வீடு என்பவையாகும். அவற்றுள் இல்லற வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது இன்பமாகும். இவ் இன்பமே அக இலக்கியமாக தமிழ் மக்களால் சிறப்பிக்கப்படுகிறது. அக இலக்கியத்தின் பொருளான காமமோ ஆண், பெண் என்னும் பால் வாய்ந்த உயர்திணை, அஃறிணை உயிர்க்கெல்லாம் பொதுவாகும். இங்கு அக இலக்கியங்களான முல்லைப் பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, ஆகியவற்றிலுள்ள கற்பு நெறியைப்பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அக இலக்கியம்:**

அக இலக்கியம் என்பது தலைவன் தலைவியின் இன்பத்தைப் பற்றிப் பேசுவதாகும். ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம் முள் கூடிப்பெற்ற இன்பம் இவ்வாறு இருந்தது எனப்பிறருக்குக் கூற முடியாததாய்த் தாமே உணர்ந்து மகிழத்தக்கதாகும். இது அகத்தே நிகழும் காரணம் பற்றி அக இலக்கியம் எனக் கூறப்படுகின்றது. சங்க

இலக்கியமும் அகத்திணையும் (காதலும்) ஆராயத்தக்கவையாகும். சங்கத் தனிப்பாடல்களின் தொகை 2381, அதனுள் அகத்திணை 1862 என்பவை ஆகும். சங்கப் புலவர் தொகை 473 என்பதாகும். அதில் அகம் பாடினோர் 373 சான்றோராவர்.

அக மாந்தர்கள் பலராயினும் தலைவனுட்பட எல்லோரும் தலைவியை நோக்கியே இயங்குபவர்களாக அகப்பாடல்களில் படைக்கப்படுகின்றனர்.

" அகத்திணை ஒரு பெண்ணிலக்கியம் "[1]

" அகத்திணை ஒரு கற்பிலக்கியம்"[2] என்று கூறப்படுகின்றன.

பத்துப் பாட்டினுள் 'முல்லைப்பாட்டு' 'குறிஞ்சிப்பாட்டு' பாட்டுக்கள் இரண்டும் அகப்பொருளை அழகுற எடுத்துக் கூறுபவை. இப்பாட்டுக்களின் பெயர்களில், முல்லை, குறிஞ்சி, என்னும் அகத்திணைப் பெயர்கள் இருப்பதைக் காண முடிகின்றது. இவை இரண்டும் முல்லை, குறிஞ்சி என்னும் திணைப் பெயர் மட்டும் கொண்டு பெயர் பெற்ற தனிச் சிறப்புடையன.

அகத்திணை என்பது தமிழர் கண்ட காதல் நெறி, தமிழ் மொழி ஒன்றிலே காணப்படும் காதல் இலக்கியம், உலக மக்களுக்கெல்லாம் உரிய காதல் வாழ்க்கையாகும். ஆதலின் அகத்திணையறிவு பெண்ணுக்கும் ஆணுக்கும் இன்றியமையாக் கல்வியாகும். நம் தமிழ்

முன்னோர் அக்கல்வியைச் செம்மையாகப் பெற்றிருந்தனர். அகத்திணை இலக்கியத்தைக் கற்கும் காதலர்க்கு நிறைவான நல்லுணர்ச்சி தோன்றுமல்லது கயமைப் புல்லுணர்ச்சி தோன்றாது.

**அகத்திணை ஓர் பெண்ணிலக்கியம்:**

இவ்இலக்கியத்தில் வரும் மாந்தர்களும் பெண் பாலரேபலர். பாங்கன் ஒரு துறையளவில் வந்து போய் விடுகிறான். பாணன் சில பொழுது வருகின்றான். தேர்ப் பாகன் கூற்றுக்குப் பெரிய இடமில்லை. தலைவனது தந்தை உடன் பிறந்தார் பற்றி ஒன்றும் சொல்லத்தக்கதாக இல்லை. தலை விதந்தையும் அண்ணன்மாரும் கூற்றுக் குரியவரல்லர். கற்பியலில் வரும் மழலை மகன் இளந் தூதுவனே அன்றி உரையாடான், தோழியும், செவிலியும், அன்னையும், பரத்தையும் அக விலக்கியத்தில் கொள்ளும் வாய்ப்பு மிகப்பெரிது. தலைவியே அகப்பாட்டிற்குத் தலைமையள். செவிலியும் அன்னையும் தலைவியின் நல்வாழ்விற்காக வாழ்பவர்கள். ஆதலின் பெண்கள் பலம் இவ் இலக்கியத்தில் அதிகம் இடம் பெறுகின்றன. கற்பின் சிறப்பு காதல் சிறப்பாக ஒளிரும். அச்சிறப்பு முடிக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒழுக்கமான, ஒழுங்கான வாழ்க்கையை உண்டாக்கும்.

**ஐந்திணையும்கற்புநெறியும்:**

தமிழர்கள் அகத்திணையைக் கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என ஏழாகப் பகுத்துள்ளனர். அவற்றுள்

கைக்கிளை ‘ ஒருதலைக் காமம்’ எனவும், பெருந்திணை ‘பொருந்தாக்காமம்’ எனவும் கூறப்படுகின்றன. ஐந்திணை சார்ந்து உருவாகும் காதலே களவு எனப்பட்டது. இது பற்றி வ.சு.ப.மாணிக்கனார்.

“ஐந்திணைப் பாடல்களில் பல்வேறு துறைகளில் பல்வேறுபாடு பொருள்கள் இடம் பெற்றுள்ளன. அதில் கற்புநெறி உன்னத நிலையில் வைத்துப் பாடப்பட்டது. கற்பு என்னும் சொல்லின் அடிச்சொல் ‘கல்‘ என்பதாகும். கல் என்ற சொல்லுக்குக் ‘ கல்லுதல் ‘ அல்லது ‘வெளிக்கொணர்தல்‘ என்பது பொருளாகும் மனத்திலே கல்லுதல் கற்பு எனப்படுகிறது. கற்பு என்பது உள்ளத் தோடு தொடர்பு கொண்டது. உள்ளத்தால் மட்டுமே உரைப்படுகின்றது.”[3] எங்கிறார்.

**முல்லைப்பாட்டில் கற்பு நெறி:**

கற்பு மனநிலை கொண்ட தலைவி தன் வாழ்வில் துன்பம் நேர்கையில் ஆற்று வாரையும், தேற்று வாரையும் நாடுவதில்லை. தனக்குத் தானே கற்ற கற்பினை நினைத்து தனக்குத் தானே பொறுத்துக் கொள்கிறார். இத்தகைய ஒழுக்கமே “ முல்லை சான்ற கற்பு “[4] எனஅழைக்கப்பட்டது. இதனையே “ கற்பெனப்படுவதுசொல்திறம்பாமை “எனப் பின்னாளில் கொன்றை வேந்தன் குறிப்பிட்டது. இப்பெரு நெறி தமிழரின் வாழ்வியல் கோட் பாடாகப் போற்றப்பட்டது.

**கற்பும் கற்பு மீறலும்:**

“கரணம் எனப்படுவது கற்பொடு புணரக்

கொளற் குரி மரபின் கிழவன் கிழ்த்தியைக் கொணர்க்குரி

மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே “[5]

என்று தொல்காப்பியர் கற்பு என்பதற்குப் பொருள் வைக்கிறார். இது தான திருமணம்; இதற்குப் பெயர்தான் கற்பு. பெற்றோர்களும், சமுகப் பெரியோர்களும் கூடி இருந்து வாழ்த்தித் தலைவனையும் தலைவியையும் இணைத்து வைக்கின்ற நிகழ்ச்சியாக அது அமைதல் வேண்டும் என்கிறார். காலப் போக்கில் சிலர் நெறி தவறி நடக்கத்தலைப்பட்டனர். காதலித்த மங்கையைக் காதலிக்க வில்லை என்று கூறினர். களவொடு ஒழுகி வாழ்க்கை நடத்திய பிறகு துணைவியைக் கைவிடவும் செய்தனர். அது கண்ட குலப் பெரியோர்கள் இப்பொல்லாத நோய் பலரிடையேயும் பரவக்கூடும் என்று அஞ்சி கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர்.

ஒழுக்கம் தவறுதல் என்பது உள அடிப்படை மட்டுமல்ல உடல் அடிப்படையும் தான் அளவற்ற, ஒழுங்கற்ற நுகர்வு, ஆசை எல்லவிதமான ( உள்ளம், உடல் ) நோய்களையும் பெற்றுத்தரும். இது

போன்ற வீபரீத எண்ணங்களால் சமூகப் பாதிப்புக்கள் மட்டும் அல்லாது குடும்ப, உள, உடல் சார்ந்த பாதிப்புக்களும் இருந்திருக்க வேண்டும்.

சங்கத்தமிழ் இலக்கியங்களில் அதிகமான இலக்கியங்கள் காதல் வாழ்க்கையையும் கற்பு வாழ்க்கையையும் பதிவு செய்கின்றன.

போர் செய்தல் தொடர்பாகத் தன் மனைவியை விட்டுப் பிரிந்து செல்கிறான் தலைவன், கார்க்காலத் தொடக்கத்தில் வருவேன், அது காறும் நீ ஆற்றியிரு என்பது தனது மனைவியிடம் அவன் கூறிச் செல்லும் ஆற்று மொழி. ஆனால் வருவதற்கு காலம் தாழ்ந்து விடுகிறது. இச்சூழலில்,

“அருங்கடிமூதூர்மருங்கிற்போகி

யாழிசை இவைண்டு ஆர்ப்ப நெல்லொடு

நாழி கொண்டுநருவீ முல்லை

அரும்ப விழ் அலரிதூ உய்க்கைதொழுது

பெருமுதுபெண்டிர்விரிச்சிநிற்பச் “ (முல்லை - பா. 7 - 11)

என்று தலைவனைப் பிரிந்து தனித் திருக்கின்ற தலைவியின் நிலை கண்டு, அரியகாவலை உடைய தலைவி வாழும் பழமையான ஊர், யாழ் போன்று இனிமையாக வண்டுகள் ஒலிக்கின்றன. அம்மாலைப் பொழுதில் நெல்லையும், நல்லமனமுடைய மலர்ந்த நாழி முல்லை

மலரையும் சேர்த்துத் தூவி, திருமால் கோயிலில் கைதொழுது வயதான பெண்டிர் நற்சொல் கேட்க நின்றனர்.

களவொழுக்கத்தை முடித்துக் கொண்ட தலைவி கற்பொழுக்கத்தை அத்தலைவனுடனேயே தொடர வேண்டும் என எண்ணுகின்றனர். தோழி, நற்றாய், பெற்றோர் போன்றவர்கள் சுட்டிக் காட்டுவது இப்பண்பாட்டு ஒழுக்கம் மீறப்படக் கூடாது என்பதாகும். களவுடன் ஒரு தலைவன், கற்புடன் ஒரு தலைவன் என்பதெல்லாம் தமிழ் அகமரபில் கடுமையாக மறுக்கப்பட்ட ஒழுக்கமாகும்.

கற்பு என்பதைப் பொதுமைப்படுத்தி " கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"[6] காலத்திற்குக் காலம் கற்பு மீதான மதிப்பீடுகள் மாறிக்கொண்டே வந்தாலும் அதனால் ஏற்படும் சிக்கல்கள் அதிகமாகிக் கொண்டே தான் இருக்கின்றன. பக்குவப்படுகின்ற தன்மை இல்லாத குணமில்லாத சூழலில் உறவிழப்பு, உயிரிழப்பு, உடைமை இழப்பு போன்ற பல்வேறு இழப்புகள் ஏற்படுகின்றன.

போர்களத்தில் வீரர்களுக்கும், அரசர்களுக்கும் உதவி செய்தல் பொருட்டுப் பெண்களும் இருந்துள்ளனர். இந்நிலைகளை எல்லாம் மீறித்தான். தலைவனும் தலைவி மீதான தனது அன்புமிக்க காதலால் சிறந்து விளங்கியுள்ளான். காதல், கற்பு என்ற சூழலில் தலைவன்

தலைவி ஆகிய இருவருக்குமே மாறு பாடற்ற தொடர்பு உண்டு என்றாலும் தலைவிக்கே அதிகமான பாடல்களும் பிரிவாற்றாமை நிகழ்வுகளும் சுட்டப்படுகின்றன. தலைவனைக் குறிப்பிடும்பொழுது அவனுடைய கடமைகளே சுட்டப்படுகின்றன. தலைவியால் தலைவனுடைய கடமை உணர்வுகளும், பிரிவதற்கு முன்பு அவன் தன்னோடு காட்டிய அகவுணர்களும் தலைவியால் நினைத்துப் பார்க்கப்படுகின்றன. இதனை,

“இன்துயில்வதியுநற்காணாள்துயருழந்து

நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு

நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்

மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்

ஏலுறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து “ (முல்லை - பா - 80 - 85)

என்றபாடல் அடிகள் புலப்படுத்துகின்றன. இதன் வழி தன் காதலன் பிரிந்து சென்ற சூழலில் அவனது நினைவால் நிலை இழந்து காணப்படும் தலைவியைக் காண முடிகின்றது. மேலும் தான் தன் நெஞ்சினைத் தன் பால் நிறுத்துதற்கு முயலா நிற்பவும் தன் விருப்பத்திற்கு மாறாக நெஞ்சு தலைவன் பால் போய்விடுதலும் என்பதும் உணரப்படும், தலைவி எல்லா நேரத்திலும் எல்லாப்

பொழுதிலும் தலைவனையே எண்ணி மகிழ்கிறார். காதல் அல்லது கற்பு நிலை என்னும் இரண்டு நிலைகளிலும் உளம், உடல் சார்ந்த நம்பிக்கை சார்ந்தவை என்பது கருதப்படுகின்றது. முல்லைப்பாட்டின் தலைவனும் தலைவி மீதான அன்பை மாற்றிக் கொள்ளா தவனாகவே காணப்படுகின்றான். இந்த மன ஒருங்கிணைப்பு குடும்ப வாழ்க்கைக்கும் கற்புத் தன்மைக்கும் அடிப்படையாகி விடுகின்றது.

**குறிஞ்சிப் பாட்டில்கற்பு நெறி**:

தமிழ்ப் பண்பாட்டில் கற்பு நெறி உயிருக்கு மேலாக போற்றப்பட்டது. இதனை,

“உயிரினும்சிறந்தன்றுநானேநாணிலும்

செயிர்தீர்க்காட்சிக்கற்புச்சிறந்தன்று “[7]

எனத்தொல்காப்பியர்குறிப்பிடுகின்றார். இக்கோட்பாட்டின் அடிப்படையிலான ஒருவனுக்கு ஒருத்தி என்னும் வாழ்வியல் நெறியே குறிஞ்சிப்பாட்டின் அடிக்கருத்தாய் அமைந்துள்ளது.

அகத்திணைக் களவுத் துறைகளுள் ‘ அறத்தொடு நிற்றல் ‘ தனிப்பெரும் சிறப்புடையது. ஆதலால், தமிழ்ப் பண்பாட்டின் தனிச் சிறப்பை அறிவுறுத்த விரும்பியக பிலர் குறிஞ்சிப்பாட்டை ‘ அறத்தொடு நிற்றல் ‘ துறை சார்ந்து படைத்துள்ளார். அறம் என்பது பல பண்புகளைக்

குறிக்கும். கற்பென்னும் கடைநிலையில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப்படுத்துதல் என்பது இத்துறையின் பொருளாகும்.

நாணமும் கற்பும் மகளிர் காக்கத்தகும் இரு பேரொழுக்கங்கள் ஆகும். ஆனால் நாணத்தை விட்டேனும் கற்பைத் தலையாகப் போற்றி ஒழுக வேண்டும் என்பது தமிழர் கண்ட மனையியல் கோட்பாடு.அக இலக்கியத்தில் தோழி எல்லையற்ற உரிமையுடையவள். தலைவியின் உரிமையையும் செயலையும்தன் உரிமையாகக் கொள்ளும் உறவுடையவள், எனினும் தலைவியின் விருப்பமின்றி அறத்தோடு நிற்கும் உரிமை மட்டும் தோழிக்கு இல்லை.இதனை,

"அறத்தொடுநிற்கும்காலத்தன்றி

அறத்தியல்மரபிலள்தோழி " (தொல். லூ. 1151).

என்றுதொல்காப்பியம்கூறுகிறது.

தோழி செவிலித் தாய்க்கு அறத்தொடு நிற்கும்பொழுது தலைவியின் குடிப்பிறப்பிற்கும், செவிலியின் அறிவிற்கும், தலைவியின் நாணம், கற்பு முதலிய பெருமைக்கும், தலைவியின் திணை காவலுக்கும் இழுக்கு நேராத படி அறிவுறுத்துகிறாள். மேலும், தலைவனுக்குரிய அறிவு, நிறை, குடிப்பெருமை, சான்றாண்மை முதலிய பெருந்தகைக்குத் தவறு நேராதபடி தலைவியின் களவொழுக்கம்

நிகழ்ந்த முறையை முரண்பாடில்லா மொழிகளில் செவிலிக்கு உணர்த்துகிறாள். இதனை,

“மாதரும்மடனும்ஒராங்குத்தணப்ப

நெடுந்தேர்எந்தைஅருங்கடிநீவி

இருவேம்ஆய்ந்தமன்றல்இதுவென

நாம்அறிவுறாலிற்பழியும்உண்டோ

ஆற்றின்வாராராயினும்ஆற்ற

ஏனையுலகத்தும்இயைவதால்நமக்குஎன

மாமைர்நோக்கம்கலங்கிக்கையற்று

ஆனாச்சிறுமையள்இவளும்தேம்பும் “ ( குறிஞ்சி 19 - 26 ) என்றும்

“கொடுப்பினன்நகுடைமையும்குடிநிரலுடைமையும்

வண்ணமும்துணையும்பொரீஇயெண்ணாது

எமியேம்துணிந்தஏமஞ்சால்அருவினை “ (குறிஞ்சி 30 - 32)

என்றும் தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலிக்கு அறிவுறுத்துவதோடு தலைவியின் கற்பு நிலையையும் குறிப்பால் உணர்த்துகிறாள். நல்லூழின் செயலால் தான் தலைவனும் தலைவியும் ஓரிடத்து எதிர்ப்பட்டனர் என்பதை,

“மையல்வேழம்மடங்கலின்எதிர்தர

உய்விடம்அறியேம்ஆகிஓய்யெனத்

திருந்துகோல்எவ்வளைதெழிப்பநாணுமறந்து

விதுப்புறுமனத்தேம்விரைந்தவற்பொருந்திச்

சூருறுமஞ்ஞையின்நடுங்க ----------“ (குறிஞ்சி . 165 - 169)

என விளக்குகிறாள். இதன் வழி செவிலி தலைவியைப் பற்றியும், தலைவனைப் பற்றியும் தவறாக எண்ணாது நல்லெண்ணம் கொள்ளச் செய்கிறாள். மேலும் தலைவனின் குடிப்பெருமையையும், தலைவி மீது கொண்ட தூய அன்பையும், அவளை மணந்து இல்லறம் நடத்த விரும்புகின்ற தலைவனது வேட்கையையும் சிறப்பாக எடுத்துரைக்கிறாள். மேலும், தலைவனோடு வாழ்தலே கற்பு வாழ்க்கை.

அவ்வாழ்க்கையே அறம் சார்ந்த வாழ்க்கை. அந்த அறவாழ்க்கைக்குத் துணை நிற்றலே அறவழி எனவும் குறிப்பால் அழுத்தமாக உணர்த்துகிறாள். இந்நெறியில் செம்மையாக நின்ற தோழி, தலைவியின் காதலைச் செவிலிக்கு வெளிப்படுத்தியதோடு, செவிலியைத் தலைவியின் கற்பு நெறிசார்ந்த மனைவிக்குரிய அடுத்த செய்நிலைக்குச் செல்லச் செய்துவிட்டாள் என்பதையும் அறிய முடிகின்றது.

**கற்பெனும் திண்மையில் தலைவி:**

தலைவி தோழியிடம் தான் தலைவனிடம் கொண்ட களவொழுக்கத்தைக் கூறி மிகத் தேர்ந்த அற உணர்வு மிக்ககவளாய்க் காணப்படுகிறாள்.

“முத்தினும்மணியினும்பொன்னினும்அத்துணை

நேர்வருங்குரையகலங்கெடிற்புணரும்

எளியஎன்னார்தொல்மருங்குஅறிஞர்”[8]

என்றும்

“ இரு வேம்ஆய்ந்தமன்றல்இதுவென

நாமறிவுறாலிற்பழியும்உண்டோ

ஆற்றின்வாரார்ஆயினும்ஆற்ற

ஏனைஉலகத்தும்இயைவதாம்நமக்கெ”[9]

என்றும் தலைவி தோழியிடம் கூறுகிறாள். இதன் வழி தலைவி தன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்ட வாழ்க்கையே. வாழ்க்கை என்று தோழி எண்ணுகிறார். இந்தப் பிறவியில் அவனோடு வாழா விட்டாலும், அதனால் வரும் துன்பத்தை நான் உயிர் போந்துணையும் ஆற்றியிருப்பேன் என்றும், வரும் பிறவியிலாவது தலைவனோடு கூடி வாழ்வேன் என்றும் கூறி,

"இம்மைமாறிமறுகையாகினும்

நீயாகியர்என்கணவனை

யானாகியர்நின்நெஞ்சுநேர்பவ "( குறுந்தொகை - 49 )

என்று கூறும் குறுந்தொகைத் தலைவிக்கும் மேலாகிறார். வேழத்திற்கு அஞ்சித் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தலைவனைச் சார்ந்தபொழுதும் கூட,

"விதுப்புறமனத்தேம்விரைந்தவற்பொருந்திச்

சூருறுமஞ்ஞையின் நடுங்க "[10]

என்று அறியாத ஆடவரைச் சாரும் பொழுது நாணத்தால், உடல் நடுங்குகின்ற சூருறும் மஞ்ஞைபோலாகிறாள் என்று காட்டுவதின் மூலம் தலைவிதன் கற்பு நெறியிலும் ஏற்றம் கொண்டு இலங்குகிறாள். அப்படிப்பட்ட தலைவி நள்ளிரவில் தலைவன் வருகின்ற வழியின் இடையூறுகளை எண்ணி மிகவும் கலங்குகிறாள்.

நெஞ்சில் நினைத்தவனை, நிறைந்தவனை வாழ்க்கையில் கைப்பிடித்து அவனோடு வாழ்வதே வாழ்க்கை என்ற உயர்ந்த இலட்சியத் தலைவியாகக் குறிஞ்சிப்பாட்டுத் தலைவி விளங்குகிறார்.

**முடிவுரை:**

பத்துப்பாட்டில் அக இலக்கியங்கான முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு போன்றவையே கற்பு நெறியை நெறிப்படுத்துகிறது என்பதை இக்கட்டுரை வழி அறிந்து கொண்டோம்.

**அடிக்குறிப்புகள் (அ) சான்றெண்விளக்கம்**

1. தமிழ்க்காதல் - ப.1
2.. மேலது
3. பசும்பொன்க. ரேணுகாதேவி, வீ - செம்மொழித்தமிழ்இலக்கியங்களில்கற்புநெறி - ப - 2
4.மேலதுபக் - 3
5. தொல். பொருள் - நூ1088
6.பாரதியார்கவிதைகள் - பெண்விடுதலைக்கும்மி - பா. 5
7.தொல். பொருள் - நூ 1146
8. கபிலர்அருளியகுறிஞ்சிப்பாட்டு
9. மேலது,
10. மேலது. பக்133